1361

உ

முருகன் துணை.

தஞ்சைமா நகரம் வடக்குவாயல்

பால தண்டாயுதபாணிக் கடவுள் பேரில்

ஆசிரிய விருத்தம்.

இஃது

K. வீரமுத்துபிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

A. S. P. பஞ்சாபிகேசபிள்ளை அவர்கள்

வேண்டுகோளின்பேரில்

திருவையார் மேலவட்டம் புஸ்தகவியாபாரம்

M. அருணாசலம்பிள்ளை அவர்களால்

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

REGISTRAR OF BOOKS 27 JUN 1928 MADRAS

விலை] 184317 1928. [அணா 2.

Copyright Registered.

Q26:38:21193
1128

உ

கணபதி துணை.

தஞ்சை வடக்குவாயல்

சுப்பிரமணியக் கடவுள்பேரில்

ஆசிரிய விருத்தம்,

1. சீர்பெற்றமூஷிகவாகனமீதினில்யேரிவந்தென்
முன்னே சிங்கார சோதிமின்ன
பார்வதியும் பரமனும் முருகனொடு வானவர்
ரிஷிமுனிவர் சித்த ரின்னம்
கார்மேக வர்ண னும் கஞ்ச னும் ஜெயாஜெயா
கணபதி துணையென்ன வும்
பேர்பெற்ற தேவாயென் சிந்தையில் விளையாடும்
சுந்தர கணேச குருவே,

2. வாழ்கின்ற தஞ்சைநகர் வாழையடி வாழையாய்
வாழ்ந்திடும் வடக்கு வாசல்
வரிசையாய் கடைகளும் வண்டிகள் இருப்பிடம்
வர்ணநதி போகும்சாலை
வணங்கினேன் கரிமுகனே வாழ்ந்திடும் ஆஞ்சநேயர்
வரிசையாய் யானும் கண்டேன்

வாழ்ப்பிராயமும் எதிரிட்ட பார்வையும்
வள்ளி தெய்வானைக் கண்டேன்.
வர்ணமயிலேரியே வடிவேல் பிடித்துமே
வாமது தாவும் கண்டேன்
வள்ளிமலை யோகனே பழனிமலை வாசனே
வாழ்கின்ற வாலை மகனே
வண்மையுடன் அடியேன் நினைத்தவரம் தருவாய்
வள்ளிதெய் வானையுடனே
லாலவய தாயுனது வளர் தஞ்சை பதிவாழும்
பாலதெண்டாயுத பாணிபோற்றி.

3. மந்திரம் செய்பவர்கள் உன்னை நினையாவிட்
டால் மாரணம் செய்பவனும் நீ
தந்திரம் செய்பவர்கள் உன்னை நினையாவிட்டால்
தாரணம் செய்பவனும் நீ
ஓம் சரஹணபவா வென்று அக்ஷரம் அடக்கையில்
உயிரெழுத்தானவனும் நீ
ஒன்பது சக்கரம் ஐம்பதீதார அக்ஷரத்தில்
உயிரெழுத்தானவனும் நீ
[illegible]பான ருத்திரன் மாமுண்டி ருயினையும்
மரித்து அடிப்பவனும் நீ

மலையாள பகவதியும் தகதகவென வருகையில்
மாயமாய் கொல்பவனும் நீ
பாலன் வருந்துகிறேன் ஓலமிட்டழுகிறேன்
பதறியே வேலெடுத்து
பளபளன மயிலேறி வள்ளிதெய்வானையுடன் வருகு
வாய் பாலதெண்டாயுதபாணி போற்றி.

4. தாயில்லை தந்தையும் தமயனுமில்லையே
தற்காக்க வொருவரில்லை
தைரியம் சொல்லவும் மனிதரு மில்லையே
தனிகாஜலக் கடவுளே
மாமனும் மாமியும் மைத்துனரில்லையே
மாளாத வுறவுமில்லை
உற்றாரும் பெற்றாரும் உறமுறையாரில்லையே
ஒருபய னடைந்த தில்லை
அண்டவும் நிழலில்லை வொண்டவும் யிடமில்லை
அப்பனே கந்தவேலா
சண்டனும் வந்திப்போ கண்டனை செய்குறான்
சண்முகா உமக்கு அபயம்
காலன் வருந்துகிறேன் ஓலமிட்டழுகிறேன்
பதறியே வேலெடுத்து

18431

பளபளன மயிலேரி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் பாலதெண்டாயுத பாணிபோற்றி.

5. வேலாயுதம் வொருகை சூலாயுதம் வொருகை
விரிச்சந்திர பாணம் வொருகை

வெற்றிவேல் மகாமந்திர வாள்வொருகை
வீரகன் நாலாயிரம் பெருக

சூரியப் பிரகாசமாய் சுந்தரமாகவே
சுத்தவெளி முகங்கள் ஆறும்

நவரெத்ன மாலையும் கவசகுண்டல முடன்
நாறசிங் காரரூபம்

சூலாயுதம் பெருக சொரூப மாய்வந்த
சோமசுந்தரப் பொருளே

சூதாக சுனையினில் கிழவனுய் நின்றதொரு
சிவசுப்பிரமண்யக் கடவுளே

பாலன் வருந்துகிறேன் ஓலமிட்டமுருறேன்
பதரியே வேலெடுத்து

பளபளன மயிலேரி வள்ளிதெய் வானையுடன் வருகு
வாய் பாலதெண்டாயுத பாணிபோற்றி.

6. சதாசிவத்தில் உதித்தெழுந்த ஜோதியாச்சு
சங்கரனார் ஈன்றெடுத்த குழந்தையாச்சு
வீரமலை விருளிமலை வேலுமாச்சு
வேதாந்தம சித்தாந்தம் குடைகளாச்சு
மண்டலங்கள் நிறைந்திருக்கும் மயிலுமாச்சு
மன்னர்மன்னர் சூழ்ந்திருக்குப் படையுமாச்சு
காலனை டெதித்து நிற்கும் கடம்பனாச்சு
கந்தரிடம் அண்டிவந்தும் இடும்பனாச்சு

7. ஆறுமுக மானபொருள் நீர்தா னாகும்
அகண்டபரி பூரணமும் நீர்தா னாகும்
ஐம்பத்தோர் அக்ஷரமும் நீர்தா னாகும்
ஐந்தெழுத்தின் உயிரெழுத்து நீர்தா னாகும்
அசுரனையும் வென்றவனும் நீர்தா னாகும்
ஐந்தெழுத்தின் சுழிமுனையில் நீர்தா னாகும்
வள்ளிதெய் வானையுடன் மயிலுமேறி
வரவேணும் தண்டாயுத பாணிபோற்றி

8. ஓமென்ற சக்கரமும் நீர்தா னாகும்
ஓங்கார ரீங்கார நீர்தா னாகும்
சௌவுமென்ற அக்ஷரமும் நீர்தானாகும்
சண்முகமாய் நின்றவரும் நீர்தா னாகும்

கிலியுமென்ற அசுரரும் நீர்தானாகும்
கிழவனாய் நின்றவரும் நீர்தானாகும்
வள்ளிதெய் வானையுடன் மயிலுமேறி
வரவேணும் தெண்டாயுத பாணிபோற்றி

9. அமணர்குலம் வேரறுத்த கையும் எங்கே
ஆறுமுகம் பன்னிருகை வேலுமெங்கே
தருணத்தில் வோடிவரும் இடும்பனெங்கே
உன் சந்நிதியில் இருக்கின்ற கடம்பனெங்கே
வேகமதாய் ஓடிவரு மயிலுமெங்கே
விதமான சங்குமணி நாதமெங்கே
வள்ளிதெய் வானையுடன் மயிலுமேறி
வரவேணும் தெண்டாயுத பாணிபோற்றி

(வேறு பாட்டு.)

கதிர்காம ஆசிரிய விருத்தம்.

ஆனைமுக வாவும்மை அநுதினம் நம்பினேன்
ஐங்கரன் ஓடி வருக
ஆறுமுக சாமியின்பேரினில் கதைபாட
அன்புடன் வோடி வருக
சதுர்மறை பிர்மனும் அன்னவாகனமேறி
சரஸ்பதியுடன் வருக வருக

பாமனும் பார்வதி ரிஷபவாகனமேரி
பண்புடன் வருக வருக
சேஷ சயனத்தினில் ரெங்கரும் அலமேலுமங்கையும்
சீக்கிரம் வருக வருக
தெசரதர் புத்திரர் ஸ்ரீ ராமர் லெக்ஷ்மணர்
சீதையுடன் வருக வருக
கெருடவாகனமேரும் ஶ்ரீதா ருக்மணியுடன்
கிருஷ்ணனும் வருக வருக
சிங்கவா கனமேரும் செங்களாச்சி அம்மனும்
க்ஷணத்தினில் வருக வருக
புஷ்பசிவி யின்மீதில் விளங்கும்
அப்பிலூர் மாரியும் அருகினில் வருக வருக
அக்கினி பாணத்தை அதாவே பொடி செய்யும்
அன்னேகா மாக்ஷிவருக
அஷ்டதிக் கிலுள்ள துஷ்டர்களே
அதம் செய்யும் அங்காள அம்மன் வருக
முப்பத்தி முக்கோடி தேவர்கள் முனிவர்கள்
என் முன்னமே வருக வருக
நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகளும் முனிவர்கள்
நடனப் பெண்ணுடி வருக வருக

எமதர்ம ராஜனும் யெருதுமேலேரியே
யென்முன்னே வருக வருக
ஆனைவா கனமேறும் ஐயனுர் முனிவரும்
ஆடியே வருக வருக
இத்தனை பேர்களும் இங்குவந்திருக் கையில்
யேன் ஆறுமுகம் வரவேயில்லை
எங்கையோ ஞாபகம் எவ்விடத்தில் சிந்தையோ
யென்மேல் மனஸ் தாபமோதான்
லைந்து வருஷமாய் நித்திரை யில்லயே
நாதனைப் பார்க்கவேண்டி
அன்னம் புசிக்கலை தண்ணீர்குடிக்கலை
நற்சுகம்பெறவே இல்லை
வருகிறுர் வருகிறுர் வருகிறுர் வருகிறுர்
வர்னமயிலேரி கந்தன்
சங்குநா தங்களும் யெங்கையோ கேழ்க்குது
சண்முகம் வருவதாக
காலினில் வெண்டையம் கலகலென தண்டயம்
கனகமணி சத்தத்தோடு
காவியுடைதரித்து கவிசகுண் டலமணிந்து
கானமயிலேரி கந்தன்

26:58.2.1193
M28

கடம்பனொருகாவடி இடும்பனொருகாவடி
காணாத லெக்ஷ்மிகோடி
கண்டவர்கள் பாடவும் கைகட்டி
யாடவும் கந்தவேல் நின்றாடவும்
கடம்பா வனத்தை அதம் செய்த ஐயனே
கதிர்வேலெடுத்து நீறும்
கடகடென மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் கதிர்காமவேல் முருகனே.

பழனிவேலன்பேரில்

பனிரேண்டுகைவேல் ஆசிரிய விருத்தம்.

சிரசிதனில் கிரீடியும் சிங்கார தோள்களும்
திருமணிகள் கழுத்தினழகும்
திருநீற்று நெத்தியும் சிறந்த பு[illegible]ல்களும்
சிங்கார இடையினழகும்
பன்னிருகையினில் ஆயுதமும் சொல்லவே
பாலனே நானோடி வந்தேன்
வேலாயுதம் வொருகை சூலாயுதம் வொருகை
விருச்சந்திர சாட்டை வொருகை

18437
600 003

கீதங்கள் பாடவே கிண்கிணிவொருகை
கேசவன் சங்குவொருகை
சமணரை வதைத்திட்ட சக்கரம் வொருகை
சங்கரன்மானும் வொருகை
மகமாயி பகவதி மகாதேவி பிடித்திட்ட
மந்திரமழுவும் வொருகை
வீராதிவீரரை வெல்லவே யெடுத்திட்ட
வேதாந்த வில்லும் வொருகை
அமணர்குலம் கருவை அருத்திட்ட
ஆங்கார அம்பும் வொருகை
மகாதேவரானாலும் கண்டு திடுக்கிடுவார்
மந்திரவாளும் வொருகை
கணக்குடன் அக்ஷரம் ஜெபிக்கவே வந்திட்ட
கண்ரகோடாலியும் வொருகை
கார்த்திடும் ஈராறு கரத்தினில் அணிந்து
நீ கானமயி லேறினின்று
பளபளன மயிலேறி வள்ளிதெய் வானையுடன்
வருகுவாய் பழனிமலை வேல்முருகனே.

வெண்பா.

சீர்புகழும் யானைமுகன் செழித்து வாழ்க
சிறப்புடனே திருமாலும் மங்கை வாழ்க

வார்குழலால் தெய்வானை வள்ளி வாழ்க
மணம் புணர்ந்த ஆறுமுகம் வடிவேல் வாழ்க
தார்புகழு மேலமலை முருகர் வாழ்க
தமிழ்சொன்ன பிள்ளைகளும் தழைத்து வாழ்க
பார்புகழும் அன்னமொரு கொடிகளாகும்
பாரமலை யாண்டவனே பழனிவேலு

வெண்பா.

1. மூர்க்கமுள்ள ஆறுமுக வடிவமாகி
முழைத்தெழுந்த சோதியைநான் காணவேண்
தீர்க்கமுள்ள மணிமார்பா அமரர் கோவே
செங்கைவடிவேலவனே யென்றும் சொன்னேன்
கார்க்கமன மிரங்கலையோ அய்யா சுவாமி
கந்தனே என்மீதில் தயவு வைத்து
கார்க்கயினி வேணுமையா யேழைபங்கா
பாரமலை ஆண்டவவே பழனிவேலு

2. குயிலதுபோல் கூவுகிறேன் வாய்திறந்து
கொஞ்சும் நல்ல சடைபாண்டி குழைக்கதைவேலு
வெயில்கண்ட மெழுகதுபோல் உருகுறேன்
மேனியெக்கும் புண்ணாகி மெலிந்துவாடி
மயில்நடன மாடிவர்து பென்னைக்காரும்

மலைமுருகா செந்தில்வடி வேலாவுன்னை
மயிலது பண்ணுதே விடவுமாட்டேன்
பாரமலை யாண்டவனே பழனிவேலு

3. தேடினேன் சிங்காரவேலா உந்தன்
திருமுகமும் பன்னிரெண்டு கையும்வேலும்
காடினேன் மலைதோறும சுற்றிவந்தேன்
நறகமல ஆறுமுக பாதம் காண
ஆடினேன் ஆறுமுக வேலாயென்று
ஆண்டவரும் ருத்ராக்ஷ மாலைபூண்டு
பாடினேன் எனது கலி தீருமையா
பாரமலை யாண்டவனே பழனிவேலு.

4. கால்கொண்ட தூரமெல்லாம் சுற்றிவந்தேன்
கதிர்வேலா யென்று மனம் கருத்திலெண்ணி
வேல்கொண்டு மயிலேறி கடனமாடி
விளையாடி வோடிவந்து முருகாயென்னை
ஆள்கொண்டால் உனக்குவெகு பாரமுண்டோ
அடியேனல்ஆகாது பொறுக்கமாட்டேன்
பால்கொண்டு அபிஷேகம் செய்வேனையா .
பாரமலை யாண்டவனே பழனிவேலு

5. தங்கம்போல் ஒளிவான மேனியெங்கும்
தளதளப்பாய் வெண்ணீரும் தரித்துக்கொண்டு

அங்கமெல்லாம் காவியினால் ஆடைபூண்டு
அழகான ருத்ராக்ஷ மாலைகொண்டு
செங்காவி நிறமுமதாய் வருவார் வருவார் எங்கள்
தேசிகனார் திருவடியை சேர்வதற்கு
தங்கம்போல் பாதமலர் பணிவேனையா
. பாரமலை யாண்டவனே பழனிவேலு.

முற்றிபெற்றது.

வாழி வாழி வாலை கமனால்வாழி
மாலைதனில் ஆண்டி அவர் வாழி
வேண்டிய பேர் எல்லோரும் வாழி
சித்தத்தில் தித்திக்கும் சிவசுப்ரமணி வாழியே

[library stamp]

Q26:38:21193

புத்தக விம்பளரம்.

தஞ்சை வடக்குவாயல் பாலதண்டாயுதபாணி ஆசிரிய விருத்தம் 0 2 0

பழனிவேலவன், கதிர்காமவேலவன், திருச்சந்தூர் வேலவன் ஆசிரிய விருத்தம் 0 2 0

சாக்கர்பிட்டுக்குமண்சுமந்த நொண்டிசிந்து 0 1 0

திருவாதி மேலவட்டம் பாலதெண்டாயுதபாணி கடவுள் பேரில் பஞ்சரத்தினமாலையும், அரிச்சொவடி ராமாயணமும் விபூதி அணிய பஞ்சாக்ஷர விதிகளும் கூடிய சீக்கிரம் வெளிவரும். இப்புத்தகங்கள் கிடைக்கும் இடம் திருவாதி மேலவட்டம் M. அருணாஜலம் பிள்ளையிடமும், A.S.பொன்னுசாமிபிள்ளை ஷாப்பிலும் கிடைக்கும். சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம், மொத்தவிலைக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

எமது விலாஸம்—

M. அருணாஜலம்பிள்ளை,
புத்தக வியாபாரம், மேலவட்டம்
திருவாதி (தஞ்சை ஜில்லா)

184317